

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 17.1.2026 அன்று பொங்கல் திருநாளையொட்டி மதுரை மாவட்டத்தில் உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்டு, வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்கள் மற்றும் காளையின் உரிமையாளர்களுக்கு தங்க மோதிரம், தங்கக் காசு உள்ளிட்ட பல்வேறு பரிசுப் பொருட்களை வழங்கி இரண்டு புதிய அறிவிப்புகளை வெளியிட்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்ச்செல்வன், சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 16.1.2026 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், திருவள்ளுவர் திருநாளையொட்டி, தமிழ் வளர்ச்சித் துறை சார்பில், தமிழறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் 2026ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார் அவர்களுக்கும், 2025ஆம் ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது வழக்கறிஞர் திருமதி அ.அருள்மொழி அவர்களுக்கும், அண்ணல் அம்பேத்கர் விருது சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா விருது நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது எஸ்.எம்.இதயத்துல்லா அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது கவிஞர் நெல்லை ஜெயந்தா அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது கவிஞர் யுகபாரதி அவர்களுக்கும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது முன்னாள் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு அவர்களுக்கும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் சு.செல்லப்பா அவர்களுக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் விருது விடுதலை விரும்பி அவர்களுக்கும், 2025ஆம் ஆண்டிற்கான இலக்கிய மாமணி விருதுகளில் இலக்கியச் சுடர் த.இராமலிங்கம் (மரபுத் தமிழ்) அவர்களுக்கும், எழுத்தாளர் சி. மகேந்திரன் (ஆய்வுத் தமிழ்) அவர்களுக்கும், இரா.நரேந்திரகுமார் (படைப்புத்தமிழ்) அவர்களுக்கும், விருதுத் தொகையாக தலா 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை ஆகியவற்றை வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.கே. சேகர்பாபு, சிவ.வீ. மெய்யநாதன், மருத்துவர் மா. மதிவேந்தன், மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.நா.எழிலன், எஸ்.எஸ்.பாலாஜி, பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளான 15.1.2026 அன்று சென்னை நேதாஜி சாலை, நாராயணப்ப தெருவில் சாலையோரம் வசிக்கும் மக்களை சந்தித்து, அவர்களின் தேவைகளை கேட்டறிந்தபோது, அங்கு வசித்துவரும் துரை–சுமதி தம்பதியரின் ஆண் குழந்தைக்கு "வெற்றி என்று பெயர் சூட்டினார். உடன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 17.1.2026 அன்று பொங்கல் திருநாளையொட்டி மதுரை மாவட்டத்தில் உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்டு, வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்கள் மற்றும் காளையின் உரிமையாளர்களுக்கு தங்க மோதிரம், தங்கக் காசு உள்ளிட்ட பல்வேறு பரிசுப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்ச்செல்வன், சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, ஆ. வெங்கடேசன், பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 17.1.2026 அன்று ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இராமேஸ்வரம் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணை செயலாளர்கள் பிச்சை, எம். முத்துராமன், நகர அம்மா பேரவை தலைவர் கண்ணன், 7வது வார்டு செயலாளர் அய்யன்தாஸ், நகர அம்மா பேரவை பொருளாளர் மற்றும் 5வது வார்டு அவைத் தலைவர் நம்புவேல் உள்ளிட்ட 65 மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள் கே.என். நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன், மு.பெ.சாமிநாதன், ஆர். எஸ். ராஜகண்ணப்பன், திருமதி கயல்விழி செயல்வராஜ், இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், முன்னாள் அமைச்சரும், கழக இலக்கிய அணித் தலைவருமான அன்வர் ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், நல்லி குப்புசாமி பொங்கல் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவரும், தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான என். கண்ணையா பொங்கல் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, பொங்கல் விடுமுறை முடிந்து தென் மாவட்டங்களில் இருந்து சென்னை மற்றும் பிற நகரங்களுக்குத் திரும்பும் பொதுமக்களின் வசதிக்காகக் கூடுதல் அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, 17.01.2026 அன்று திருச்சி முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பயணிகளுக்காக இயக்கப்படும் கூடுதல் அரசுப் பேருந்துகள் மற்றும் செய்யப்பட்டுள்ள சிறப்பு வசதிகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார். பயணிகள் எவ்விதச் சிரமமுமின்றி, பாதுகாப்பாகத் தங்களது இருப்பிடங்களுக்குச் சென்று சேரத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். உடன் போக்குவரத்து மேலாண்மை இயக்குநர் மற்றும் அலுவர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு தெற்கு மாவட்டத்தில் திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு மகளிருக்கான திருவிழா ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ஏற்பாட்டில் கோலப்போட்டி, எம்ராய்டரி, மெஹந்தி, காய்,கனியில் உருவம் வடிவமைத்தல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி பரிசுகள் வழங்கினார். நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மாவட்ட கழக நிர்வாகிகள் கே.குமார் முருகேஸ், ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லபொன்னி, டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, ராஜு (எ) முருகேசன், என்.டி.பத்மநாபன், எம்.கேசவன், நா.மகாலிங்கம், மு.பல்கீஸ், ஆர்,பொன்னுசாமி, பி.கதிர்வேல், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ், மண்டல தலைவர்கள் ப.க.பழனிச்சாமி, மு.ப.சுப்பிரமணியம், ப.சசிகுமார், குறிஞ்சி என்.தண்டபாணி, பகுதி கழக செயலாளர்கள் பொ.ராமச்சந்திரன், எஸ்.குமாரவடிவேல், வி.சி.நடராஜன், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், அக்னி டி.சந்திரசேகர், கா.லட்சுமணகுமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், மகளிர் அணி, மகளிர் தொண்டரணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BDA, BLC நிர்வாகிகள், கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்